# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 251/ந/2017

ஆணை எண். 280/2017

நாள் : 18/12/2017

திரு G.K. ஸ்டான்லி,
தஞ்சாவூர். – **முறையீட்டு மனுதாரர்**

நகராட்சி ஆணையர்,
புதுக்கோட்டை. – **எதிர் மனுதாரர்**

தஞ்சாவூர், முனிசிபல் காலனி, எம்.சி. சாலை 2–வது குறுக்குத் தெரு எண்–8 கல்யாணம் நகர் முகவரியில் வசிக்கும் திரு G.K.ஸ்டான்லி அவர்களின் 07.12.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 08.12.2017 அன்று பெறப்பட்டு 251/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

தஞ்சாவூர், முனிசிபல் காலனி, எம்.சி. சாலை 2–வது குறுக்குத் தெரு எண்–8 கல்யாணம் நகர் முகவரியில் வசிக்கும் திரு G.K.ஸ்டான்லி என்பவர் 6–வது ஊதியக்குழு பரிந்துரையின் கீழ் வழங்கப்பட்ட நிலுவைத் தொகைக்கான வட்டித் தொகை வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். முறையீட்டு மனுதாரர் தான் 31.10.2000 அன்று நகரமைப்பு ஆய்வாளர் பணியிலிருந்து வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஒய்வு பெற்றதாகவும், 6–வது ஊதியக்குழுவின் படி 40 சதவிகித நிலுவைத் தொகை மட்டுமே தனக்கு வழங்கப்பட்டது என்றும் மீதி 60 சதவிகித நிலுவைத் தொகை மூன்று தவணைகளில் வழங்கிய பொழுது அத்தொகைக்கான வட்டித் தொகை வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து இம்முறைமன்ற நடுவத்தில் முறையிட்டுள்ளார். மேலும், அரசு வழங்கும் மானியத் தொகையும் இன்றுவரை வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். முறையீட்டு மனுதாரர்

ஊதியக்குழுவின் பரிந்துரையின்படி தனக்கு வழங்க ஆணையிடப்பட்ட தொகை எவ்வளவு எனத் தனது மனுவில் குறிப்பிடவில்லை. மேலும், மனுதாரர் 31.10.2000 அன்று பணியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டார். ஆறாவது ஊதியக்குழுவின் பரிந்துரை 2006–ஆம் ஆண்டிலிருந்துதான் அரசு செயல்படுத்தியது எனத் தெரியவருகிறது. இந்நிலையில், 31.10.2000 அன்று பணியிலிருந்து ஓய்வு பெற்ற மனுதாரருக்கு எவ்வாறு மேற்குறிப்பிட்ட 6–வது ஊதியக்குழுவின் பரிந்துரை பொருந்தும் எனத் தெரியவில்லை. மேலும், 15.07.2014 நாளிட்ட புதுக்கோட்டை நகராட்சி ஆணையரின் கடிதத்திலும் மனுதாரருக்கு 6–வது ஊதியக்குழு பரிந்துரைத்த தொகை மற்றும் வட்டித் தொகை 3 தவணைகளில் வழங்கப்பட்டு விட்டதாக குறிப்பிட்டுள்ளது. எனினும் மனுதாரருக்கு வழங்கப்படவேண்டிய நிலுவைத் தொகை ஏதேனுமிருப்பின் அவரது முறையீட்டினை மனித நேயத்துடன் பரிசீலித்து மேலும், காலம் தாழ்த்தாமல் அவரது கோரிக்கை குறித்த மனுமீது உடன் நடவடிக்கை மேற்கொள்ள இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

**2017**-- ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், **18**–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. நகராட்சி ஆணையர்,
   புதுக்கோட்டை.

2. **திரு G.K. ஸ்டான்லி,**
   **எண். 8, கல்யாணம் நகர்,**
   **2வது குறுக்குத் தெரு, முனிசிபல் காலனி,**
   **எம்.சி. ரோடு,**
   **தஞ்சாவூர் –613 007.**

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்